இந்து சமய அறநிலையத்துறை

அனுப்புநர்

ஜெ.குமரகுருபரன் இ.ஆ.ப.,
ஆணையர்,
சென்னை-34

பெறுநர்

அனைத்து இணை ஆணையர்கள்,
அனைத்து உதவி ஆணையர்கள்

ந.க.எண். 61387 / 2021 / எம்3 நாள் 26.08.2021

பொருள்: நிலங்கள்-இணைய தளத்தில் திருக்கோயில்கள் DCB விவரங்கள் பதிவேற்றம் செய்தல் - கணினி, பிரிண்டர் மற்றும் ஸ்கேனர் - நிதி வசதி உள்ள திருக்கோயில்கள் நிதிவசதி இல்லாத திருக்கோயில்களுக்கு பெற்று வழங்குதல் -தொடர்பாக.

பார்வை : ஆணையர் அவர்களது சீராய்வுக் கூட்ட அறிவுரை நாள் 26,08,2021

....

இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயில்-களுக்கு சொந்தமான அசையா சொத்துக்களில் இருந்து பெறப்படும் வருவாயினைக் கண்காணித்து மேம்படுத்த வேண்டி திருக்கோயில் கேட்பு வசூல் நிலுவை (DCB) விவரங்கள் அனைத்தையும் இந்து சமய அறநிலையத்துறை இணையதளத்தில் பதிவேற்றம் செய்திட அனைத்து திருக்கோயில்கள் நிர்வாகிகளுக்கும் அறிவுறுத்தப்பட்டு செயலாக்கம் செய்யப்பட்டு வருகிறது.

திருக்கோயில்களின் அசையா சொத்துக்கள் மற்றும் கேட்பு-வசூல்-நிலுவை (DCB) விவரங்களை இணையதளத்தில் பதிவேற்றம் செய்திடும் பணிக்கு தேவையான கணினி, பிரிண்டர், ஸ்கேனர் ஆகியவற்றினை நிதிவசதி இல்லாத திருக்கோயில்களுக்கு நிதிவசதி உள்ள திருக்கோயில்களின் நிதியிலிருந்து பெற்று வழங்கிட கீழ்க்காணும் நிபந்தனைகளின்படி உரிய நடவடிக்கைகளை உடன் மேற்கொள்ள அனைத்து இணை ஆணையர் மற்றும் உதவி ஆணையர்களை கேட்டுக் கொள்ளப்படுகிறது.

1) மேற்கண்ட பணியினை நிறைவேற்றுவதற்கு சம்பந்தப்பட்ட திருக்கோயில்களில் நிதிவசதி இல்லையெனில், நிதிவசதிமிக்க

Verified @ RealEstate ™

திருக்கோயிலில் இருந்து கடன் பெற்று இப்பணி செய்து முடிக்கப்பட வேண்டும்.

2) இப்பணி மேற்கொள்ளப்பட்டதற்கு ஏற்பட்ட செலவினத்திற்கு உரிய ஆவண நகலுடன் ஆணையருக்கு விண்ணப்பித்து ஒப்புதல் பெறப்பட வேண்டும்.

3) இப்பணிக்காக செலவிடப்பட்ட தொகை ஆணையரால் ஒப்புதல் வழங்கப்பட்ட பின்னர், கடன் வழங்கிய நிதிவசதிமிக்க திருக்-கோயிலுக்கு ஆணையர் பொதுநல நிதியிலிருந்து திரும்ப வழங்கப்படும்.

இச்சுற்றறிக்கை விவரத்தினை தங்களது ஆளுகையின் கீழ் உள்ள அறநிறுவனங்கள் / செயல் அலுவலகளுக்கு தெரிவிக்க வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ஒம்./-ஜெ.குமரகுருபரன்
ஆணையர்

/உ.ந.உ.ப./

27.8.2021
கண்காணிப்பாளர்

நகல்

சி1 பிரிவிற்கு தொடர் நடவடிக்கைக்காக

27.8.2021